திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம்

* 81 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி—ஈரோடு இருப்புப்பாதையில் லாலாப்பேட்டை அருகில் இருப்புப்பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். பரிசீலனையிலுள்ளது.

கோயம்புத்தூர் பேருந்து நிலயத்திற்கருகில் மேம்பால வேலை

* 82 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் பேருந்து நிலயத்திற்கருகில் மேம்பாலம் (Level Crossing) கட்டும் வேலை எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்

திரு. சு. துரைசாமி : இந்தத் திட்டத்தை ஆரம்பித்த நேரத்தில் எப்போது முடிக்கப்படும் என்று குறிப்பிருக்கிறதா ? அந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு என்ன ? இப்போது நடைமுறையில் அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே 1973 டிசம்பருக்குள் முடிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1973 டிசம்பருக்குள் அந்த வேலை முடிந்துவிடும் என்றே எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட மொத்த எஸ்டிமேட் 40 லட்சம். டெண்டர் அனுமதிக்கப்பட்டது 35 லட்சத்து 20 ஆயிரத்து 300 ரூபாய்.. இதுவரை என்னிடம் உள்ள புள்ளிவிவரப்படி 19.32 லட்சம் செலவாகியிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? ஆரம்பத்தில் போட்ட எஸ்டிமேட் எவ்வளவு ? இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முன்பு 40 லட்சம் எஸ்டிமேட் போடப்பட்டது. The estimated cost is roughly estimated at Rs. 44 lakhs.

1973 ஆகஸ்ட் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி: கோவை மேம்பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததே, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைக் கட்டிக் கொடுப்பது கண்டிராக்டரின் பொறுப்புதான், அவர்கள்தான் அதைச் செய்து கொடுக்க வேண்டும்.

Broadening of Kuzhithurai bridge

* 83 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government have recommended the broadening of the Kuzhithurai bridge on the National Highways in Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: எப்போது நடைமுறையில் வரும்? இதற்குச் செலவு என்ன ஆகும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அநேகமாக ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று நம்புகிறேன்.

Formation of tank at Vanisalampatti

* 84 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a tank at Vanisalampatti village in Omalur taluk in Salem district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) வாணிசலம்பட்டியின் அருகில் ரூ. 3,06,700 மதிப்பீட்டில் ஒரு குளம் அமைக்கும் திட்டம் நவம்பர் 1972-ல் அரசால் ஒப்புதலளிக்கப்பட்டது. இத்திட்டத்தினால் 134.40 ஏக்கர் பயன் பெறும். மேலும் 104.59 டன் கூடுதல் அளவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: ஓமலூர் வட்டத்தில் வாணிசலப்பட்டியில் அமைக்க இருக்கும் குளம் எப்போது முடிவு அடையும் என்று அறிவிக்க முடியுமா?